கவிதை சுமக்கும் சோகம்

எனது
வாசல் கதவுக்கு அப்பால்
விழுந்து கிடக்கும் சொர்க்கம்
யாருக்கு சொந்தம்?

எனது
பார்வை தேசமெங்கும்
பழுத்துத் தொங்கும் ஞானப்பழங்கள்
பழங்காலத்து தெய்வங்களின்
பல்சுவை உணவா?

வான வீதியில் கலைந்தோடும்
கருமேகங்களுக்குப் போட்டியாக
விரைந்தோடும் என் எண்ணங்கள்
காலதேவனின் கௌரவிப்பா?

இலக்கண வேந்தர்களின்
இழிச் சொல் சாட்டையடியில்
நவீனக் கவிதைகளின் மேனி
புது வரிகளைப் பெறுமா?

மாடுமுட்டி
மாபெரும் மனிதர்கள் வீழ்கையில்
மலைகள் என்ன கவிதைக்கு கால்தூசு!

இலக்கண மணிமகுடங்களைச்
சுயமாயணிந்த
சர்வாதிகார மன்னர்களெல்லாம்
கூவியழைத்து விற்கிறார்கள்
அரச இலக்கிய சிம்மாசனங்களை...

கவிதைகளின் கழுத்து
கருத்தாய் முறிக்கப்பட்டபோதும்
எனது
கவிதை நேசம் மட்டும்
காற்றினூடே சுமந்து செல்கிறது
மானுடர்களின் சோகம்!

- ஏ.எஸ். பிரான்சிஸ்